# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | அ.சா.8 |
| Name | : | பெருமாள் |
| Father's / Husband Name | : | கோவிந்தராஜன் |
| Address | : | செட்டிக்குளம் |
| Age | : | 42/2025 |

**<u>தேதி : 18.02.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.6 சூர்யா என்னுடைய மனைவி. எதிரியை தெரியும். எதிரியின் கணவர் ஸ்டுடியோ வைத்திருந்தார், அவர் மூலமாக எதிரியை தெரியும். அவர் எங்கள் ஊர்தான். என்னுடைய மனைவிக்கு தனியார் வங்கியில் லோன் வாங்கி கொடுத்த வகையில் எதிரி எனக்கு பழக்கம். எதிரி தன்னுடைய குடும்ப கடனை அடைப்பதற்காக என்னுடைய மனைவியிடம் லோன் வாங்கி கொடுக்க வேண்டும் என்றும் அந்த லோனை அவரே அடைத்துவிடுவதாக சொன்னார். அதனால் என்னுடைய மனைவி துறையூரில் உள்ள முத்தூட் பைனான்ஸ் என்ற நிதி நிறுவனத்தில் லோன் போட்டு பிடித்தம் போக மீதி தொகை ரூ. 48,100/-ஐ இரண்டு தவணைகளாக ரூபாய் 20 ஆயிரம் மற்றும் ரூ.28,100/- ஆக எதிரியின் G pay கணக்கிற்கு அனுப்பிவைத்தார். லோனுக்கான தவணை தொகையை

1வருடம்  எதிரி கட்டினார். அதன் பிறகு கட்டாததால் நிதி நிறுவனத்திலிருந்து ஆட்கள் வந்து என்னிடம் பணத்தை கட்ட சொன்னார்கள்.

அதன்பிறகு எதிரிக்குபோன் செய்து பார்த்தேன், போனை எடுக்கவில்லை. எங்கு போனார் என்று தெரியவில்லை. ஊரில் நிறைய பேரிடம் லோன் வாங்கி கட்டாமல் ஏமாற்றியதாக கேள்விபட்டேன். இது சம்மந்தமாக  சத்தியா என்பவர் புகார் கொடுத்தார். அதற்கு பிறகு குற்ற பிரிவு போலீஸார் வசந்தியை கைது செய்திருப்தாக சொன்னார்கள். நான் குற்ற பிரிவு காவல் நிலையத்திற்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். வசந்தி பணம் வாங்கியதை ஒப்புக்கொண்டார். அதற்காக என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள், என்னுடன் செந்தமிழ்செல்வன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது  சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.39 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

நான் 37 நபர்களுடன் ஒன்றாகத்தான் கூட வந்தேன் என்றால் சரிதான். செந்தமிழ்செல்வன் என்பவருடைய மனைவியும் கடன் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பெரம்பலூர் வந்துதான் எல்லோரும் ஒன்றாக சென்றோம். என்னுடைய மனைவி மற்றும் செந்தமிழ்செல்வனின் மனைவி ஆகியோர்கள் போலீஸார் விசாரணைக்கு சென்றார்கள். என்னையும், செந்தமிழ்செல்வனையும் கடைசியாக விசாரணை செய்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னுடைய மனைவி சொல்லித்தான் எதிரி ஒப்புக்கொண்டதாக எனக்கு தெரியும என்றால் சரியல்ல. போலீஸார் என் முன்பு எதிரியை கேட்டார்கள். அவர் செய்ததை ஒப்புக்கொண்டார். எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம்

கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி சொன்னதால் அதை வைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.